**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்**

**முன்னிலை-திருமதி. P. தீபா, B.A.B.L.L.L.M.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர், மாதவரம்**

**2026-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02-ம் நாள் செவ்வாய்கிழமை**

**CC.No.552/2020**

**CNR.No. - TNTR37-001154-2020**

மாநில அரசு உதவி ஆய்வாளர் மூலமாக
எம்3 புழல் காவல் நிலையம்
குற்ற எண்.617/2018 .......குற்றமுறையீட்டாளர்/வாதி

// எதிர் //

1. வீரராகவன், வயது.22,
த/பெ. சரவணன்,
எண்.4/536, ஜோதி நகர்,
4வது தெரு, பாடியநல்லூர்,
சென்னை-52.

2. மணிகண்டன் (எ) கிதர்மணி, வயது.19,
த/பெ. விஜயன்,
காசி விஸ்வநாதன் தெரு,
சோத்துபாக்கம் ரோடு, செங்குன்றம்,
சென்னை-50. ............எதிரிகள்

**CASE SUMMARY**

| Sl.No | Particulars | Details |
|---|---|---|
| I. | Period of Remand of Accused | Accused A1 - 29.09.2018 - 29.10.2018<br>Accused A1 - 07.07.2026 - till date<br>Accused A2 - 29.09.2018 - 08.11.2018 |
| II. | Date of filling of Final Report in court | 09.12.2020 |
| III. | Date of questioning of accused under section 313(1) (a) of Cr.p.c | 07.10.2024 |

DEEPA P Digitally signed by DEEPA P

| | | |
|---|---|---|
| IV | Filling of Miscellaneous petitions and their result | MP.No.5/2026 Surrender petition (Accused A2 ) filed and allowed on 11.08.2026.<br>MP.No.6/2026 Advance hearing petition ( Accused A2 ) filed and allowed on 11.08.2026. |
| V. | Date of examination of accused under section 313(1)(b) of Cr.p.c | PW1 – 27.02.2025<br>PW2 – 27.02.2025<br>PW3 – 30.04.2025 |
| VI. | Date of examination of accused under section 313(1)(b) of Cr.p.c | 24.08.2026 |
| VII. | Details of abscondence of accused and his appearance / production | Nil |
| VIII. | Grant of stay buy superior court and the result thereof | Nil |

இவ்வழக்கானது 09.12.2020–ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இறுதியாக 02.09.2026–ம் தேதி அன்று என் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் M/s.திரு.R.சங்கர், திரு.E.துளசிராமன், திரு.J.ஞானமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கில் கடந்த 28.09.2018–ம் தேதி 10.00 மணியளவில் எம்3 புழல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காவாங்கரை ஜி.என்.டி சர்வீஸ் ரோட்டில் மாரியம்மன் நகரில் உள்ள மணிகண்டன் இரும்பு கடை எதிரில் சாட்சி–1 திரு.ராகேஷ் நடந்து சென்றுக்கொண்டு இருந்தபோது அவருக்கு எதிரில் வந்த 1வது எதிரி மற்றும் 2வது எதிரி ஆகியோர் சாட்சியிடம் கொள்ளையடித்து சுயலாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு சாட்சி–1ஐ சட்ட விரோதமாக வழி மறித்து சாட்சியிடம் பணம் கேட்டு மிரட்டிய போது சாட்சி–1 பணம் தர மறுத்ததால்

DEEPA P
Digitally signed by DEEPA P

எதிரிகள் இருவரும் சாட்சி–1யை தகாத வார்த்தைகளால் திட்டி எங்கள பார்த்து யாருன்னு கேட்குற என்று கூறி 1வது எதிரி வீரராகவன் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சாட்சி–1யிடம் காண்பித்து மிரட்டியும் 2து எதிரி மணிகண்டன் அவர் வைத்திருந்த கத்தியை எடுத்து இங்கேயே உன்னை செஞ்சிடுவோம் என்று சொல்லிக் கொண்டே சாட்சி–1ன் சட்டை பாக்கெட்டில் இருந்த பணம் ரூபாய்.2000/–யை கொள்ளையடித்து தப்பிச் செல்லும்போது எதிரி–2 சாட்சி–1யை அவர் வைத்திருந்த கத்தியால் சாட்சி–1ன் முன் தலையில் வெட்டி ரத்தகாயம் ஏற்படுத்தி சொற்பகாயத்தை உண்டு பண்ணியும் இதை பார்த்த பொதுமக்களை பார்த்து எதிரிகள் வைத்திருந்த கத்தியை காட்டியும் அவர்கள் மீது கண்ணாடி கூல்டிரிங்ஸ் பாட்டில்களையும் கீழே இருந்த கருங்கற்களை எடுத்து பொதுமக்கள் மீது வீசி பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்து எதிரிகள் காரணமாக இருந்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b),336,427,394–ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக எம்.3 புழல் காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகளிடம் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவண நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலணை செய்தும், எதிரிகள் மீது பிரிவுகள் 294(b),336,427,394 இதச கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் பற்றி வினவ எதிரிகள் குற்றத்தை பொய் என மறுத்துரைத்தார்கள். எனவே அரசு தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**5. <u>அரசு தரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு</u>**

**அ)** அ.சா.1 ராகேஷ் தனது சாட்சியத்தில், தான் பாடியநல்லூரில் பகுதியில் வசித்து வருவதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்ததுதான் என்றும், மேற்படி புகாரானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்து, 8 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், காவாங்கரை பகுதியில் வேலை செய்து கொண்டிருந்தபோது தனக்கும், வீரராகவன் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், அப்பொழுது கும்பலாக கூடிவிட்டார்கள் என்றும், தனக்கு தலையில் அடிபட்டுவிட்டது என்றும், தன்னை யார் அடித்தார்கள் என்று கும்பலில்

DEEPA P
Digitally signed by DEEPA P

தெரியவில்லை என்றும், தான் சந்தேகத்தின்பேரில் வீரராகவன் பேரில் புகார் அளித்தேன் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**ஆ)** அ.சா.2 குணசேகரன் தனது சாட்சியத்தில், தான் காவாங்கரை பகுதியில் வசித்து வருவதாகவும், சம்பவத்தை பற்றி எதுவும் எனக்கு தெரியாது என்றும், போலீசார் 5–6 வருடங்களுக்கு முன்பு தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் செய்து கொடுத்தேன் என்றும், வழக்கு பற்றிய விபரங்கள் எதுவும் தனக்கு தெரியாது என்று பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

**இ)** அ.சா.3 நந்தகுமார், உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது எம்.3 புழல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த ஆய்வாளர் திரு. நட்ராஜ் அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் கால விரையம் கருதி வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், 28.09.2018 அன்று காலை 11.00 மணிக்கு இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக காவல் ஆய்வாளர் நட்ராஜ் நிலைய பணியில் இருந்தபோது ராகேஷ் என்பவர் அளித்த புகாரினை பெற்று எம்.3 காவல் நிலைய குற்ற எண். 617/2018 இதச பிரிவு 341, 294(b), 336, 427, 392, 397, r/w 506(ii) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, மேற்படி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது முறையே அ.த.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்து, பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் ராகேஷ், குணசேகரன், பாலாஜி, ஸ்டீபன், மனோஜா ஆகியோர்களை விசாரித்து தனிதனி வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் அன்றைய தினமே சாட்சிகளான செல்லையா, ஆண்ட்ரூஸ் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்து, அவை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும். அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்து, பின்னர் சம்பவ இடத்தில் உடைந்த கண்ணாடி கூல்டிரிங்ஸ் துண்டுகள் 15, சிறிய கருங்கற்கள் 6 ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்பு கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார் என்றும், மேற்படி கைப்பற்றுதல் மகஜரானது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்து, பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்றைய தினமே எதிரிகளை 02.30 மணிக்கு கதிர்வேடு பிஆர்ஹெச் ரோட்டில் உள்ள ஒயின் ஷாப் அருகே கைது செய்து 1ம் எதிரி தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் திவாகர், சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான " நான் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என்ற பகுதி

DEEPA P Digitally signed by DEEPA P

அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்து, அதன் அடிப்படையில் வழக்கு சொத்தான கத்தியை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார் என்றும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 2ம் எதிரி மணிகண்டன் என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலததை அதே சாட்சிகள் முன்பு பதிவு செய்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான " நான் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என்ற பகுதி அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்து, அதன் அடிப்படையில் வழக்கு சொத்தான கத்தியை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார் என்றும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்து, பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, இவ்வழக்கின் புகார்தாரருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த ஸ்ரீகுமரன் மருத்துவமனை மருத்துவர் தமிழ்மதன் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றினை பெற்று, மேற்படி விபத்து பதிவேடானது மற்றும் காயச்சான்றானது அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்து, வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவு 341, 294(b), 336, 427, 392, 397, r/w 506(ii) @ இதச பிரிவு 294(b),336,427,394 சட்டப்பிரிவு மாற்ற அறிக்கை மூலம் சட்டப்பிரிவுகளை மாற்றி எதிரி மீது விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கையானது காவல் ஆய்வளார் ஜகந்நாதன் என்பவர் தாக்கல் செய்து, மேற்படி சட்டப்பிரிவு மாற்ற அறிக்கையானது அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6) இவ்வழக்கின் அ.சா.1 மற்றும் அ.சா.3 அரசு தரப்பு சாட்சிகள் எதிரிகளுக்கு எதிராக பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவ எதிரிகள் அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினார்கள். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7) <u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>

**இவ்வழக்கின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகளாவன எதிரிகளானவர்கள் பிரிவுகள் 294(b),336,427,394 கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.**

இவ்வழக்கில் கடந்த 28.09.2018–ம் தேதி 10.00 மணியளவில் எம்3 புழல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காவாங்கரை ஜி.என்.டி சர்வீஸ் ரோட்டில்

DEEPA P Digitally signed by DEEPA P

மாரியம்மன் நகரில் உள்ள மணிகண்டன் இரும்பு கடை எதிரில் சாட்சி–1 திரு.ராகேஷ் நடந்து சென்றுக்கொண்டு இருந்தபோது அவருக்கு எதிரில் வந்த 1வது எதிரி மற்றும் 2வது எதிரி ஆகியோர் சாட்சியிடம் கொள்ளையடித்து சுயலாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு சாட்சி–1ஐ சட்ட விரோதமாக வழி மறித்து சாட்சியிடம் பணம் கேட்டு மிரட்டிய போது சாட்சி–1 பணம் தர மறுத்ததால் எதிரிகள் இருவரும் சாட்சி–1யை தகாத வார்த்தைகளால் திட்டி எங்கள பார்த்து யாருன்னு கேட்குற என்று கூறி 1வது எதிரி வீரராகவன் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சாட்சி–1யிடம் காண்பித்து மிரட்டியும் 2து எதிரி மணிகண்டன் அவர் வைத்திருந்த கத்தியை எடுத்து இங்கேயே உன்னை செஞ்சிடுவோம் என்று சொல்லிக் கொண்டே சாட்சி–1ன் சட்டை பாக்கெட்டில் இருந்த பணம் ரூபாய்.2000/–யை கொள்ளையடித்து தப்பிச் செல்லும்போது எதிரி–2 சாட்சி–1யை அவர் வைத்திருந்த கத்தியால் சாட்சி–1ன் முன் தலையில் வெட்டி ரத்தகாயம் ஏற்படுத்தி சொற்பகாயத்தை உண்டு பண்ணியும் இதை பார்த்த பொதுமக்களை பார்த்து எதிரிகள் வைத்திருந்த கத்தியை காட்டியும் அவர்கள் மீது கண்ணாடி கூல்டிரிங்ஸ் பாட்டில்களையும் கீழே இருந்த கருங்கற்களை எடுத்து பொதுமக்கள் மீது வீசி பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்து எதிரிகள் காரணமாக இருந்து குற்றம்புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b),336,427, 394 –யின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

8) அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 மற்றும் அ.சா.3 சாட்சிகளை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்து, எதிரிகளுக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

9) எதிரிகள் தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்ற சம்பவத்தை பொறுத்து தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறி வாதிடப்பட்டது.

10) அரசு தரப்பில் ப.சா.1 முதல் ப.சா.12 சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்ட போதும், அரசு தரப்பில் அ.சா.1 ஆக புகார்தாரா் சாட்சி விசாரணை செய்யப்பட்டு அவர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் சமாதானமாக செல்வதாக

DEEPA P Digitally signed by DEEPA P

சாட்சியம் அளித்தும், அ.சா.2 ஆக கண்ணுற்ற சாட்சி பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளதால், அ.சா.3 ஆக புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டன.

**11)** இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆக அரசு தரப்பு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்ததுதான் என்றும், மேற்படி புகாரானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துகாவாங்கரை பகுதியில் வேலை செய்து கொண்டிருந்தபோது தனக்கும், வீரராகவன் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், அப்பொழுது கும்பலாக கூடிவிட்டார்கள் என்றும், தனக்கு தலையில் அடிபட்டுவிட்டது என்றும், தன்னை யார் அடித்தார்கள் என்று கும்பலில் தெரியவில்லை என்றும், தான் சந்தேகத்தின்பேரில் வீரராகவன் பேரில் புகார் அளித்தேன் " என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றால் ஆமாம் என்றும், எனது புகாரின் மீது மேல்நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்றால் ஆமாம் என்றும், என்னை சமாதானமாக செல்ல யாரும் வற்புறுத்தவில்லை என்றால் ஆமாம் " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 தனது சாட்சியத்தில், " கடந்த 28.09.2018 தேதி புகாரினை பெற்று அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்து, எதிரியை கைது செய்து, பின்னர் பார்வை மகஜர், அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்து, பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் அ.சா.1–யிடம் குறுக்கு விசாரணையில் எதிரிகளுக்கு ஆதரவாக கேள்வி எழுப்பி பதில் ஏதும் பெறவில்லை.

**13)** அரசு தரப்பில் சம்பவத்தினை பொறுத்து அ.சா.1 புகார்தாரர் சமாதானமாக செல்வதாகவும், தனது புகாரின் மீது மேல் நடவடிக்கை வேண்டாம் என சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.3 புலன் விசாரணை அதிகாரி தன்னுடைய சாட்சியத்தில் சம்பவம் தொடர்பாக அ.சா.1 அளித்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, விசாரணை செய்து, ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளித்து இருப்பினும், அவர் அலுவல் சாட்சி ஆவார். இவ்வழக்கின்

DEEPA P Digitally signed by DEEPA P

புகார்தாரர் அ.சா.1 தனது முதல் விசாரணையில் சம்பவத்தை பொறுத்து அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்து இருப்பினும் தான் எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டு, எதிரிகளுக்கு எதிரான வழக்கு நிரூபணம் செய்ததாக கருதுவது என்பது நீதியின் பால் உகந்தது அல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14)** எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 294(b),336,427,394 இதச கீழான குற்றசாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. எனவே எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழான குற்றத்தில் குற்றவாளிகள் என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை குற்றவாளிகளுக்கு அளிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

<u>முடிவாக</u>

**அ)** எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b),336,427,394 கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து குற்றவியல் நடைமுறைச்சட்டம் 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**ஆ)** இவ்வழக்கின் வழக்குச் சொத்துக்கள் ஒப்படைக்கப்படவில்லை.

**இ)** மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைபத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் வருடம் செப்டம்பர் மாதம் 02–ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(Sd) Tmt.P.Deepa,B.A.B.L.LLM., DEEPA P Digitally signed by DEEPA P

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**மாதவரம்**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | திரு. ராகேஷ் |
| அ.சா.2 | திரு.குணசேகரன் |
| அ.சா.3 | திரு.நந்தகுமார், உதவி ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வ.எண் | தேதி | சான்றாவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 28.09.2018 | புகார் |
| அ.சா.ஆ.2 | 28.09.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 28.09.2018 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 28.09.2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5,<br>அ.சா.ஆ.7,<br>அ.சா.ஆ.9 | 28.09.2018 | கைப்பற்றுதல் மகஜர்கள் |
| அ.சா.ஆ.6,<br>அ.சா.ஆ.8 | 28.09.2018 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.10 | 28.09.2018 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.11 | 28.09.2018 | காயச்சான்று |
| அ.சா.ஆ.12 | 09.12.2020 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |

**எதிரிகள் தரப்பு சாட்சி : இல்லை**

**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை**

**சான்று பொருட்கள் : இல்லை**

DEEPA P Digitally signed by DEEPA P

**குறிப்பு**

1. 2வது எதிரி வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார். 1வது எதிரி வீரராகவன் வழக்கு விசாரணையின் நீதிமன்ற காவலில் இருந்து வருவதால் எதிரிக்கு தீர்ப்பின் நகலை கு.வி.மு.ச பிரிவு 363(1)ன் கீழ் இலவசமாக வழங்க உத்தரவிடப்படுகிறது.

2. வழக்கு விசாரணையில் எந்த சாட்சிகளும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்குச் சொத்துக்கள் ஒப்படைக்கப்படவில்லை.

DEEPA P Digitally signed by DEEPA P

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**மாதவரம்**